RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# பத்துப்பாட்டில் தினை

**மெய் சித்ரா [அ, *]**

[அ] பெங்களூரு, இந்தியா.

# Millets in Paththupattu

**Mei Chitra [a, *]**

[a] Banglore, India

* Corresponding Author: meichitra@gmail.com

Received: 05-04-2024
Revised: 30-06-2024
Accepted: 11-07-2024
Published: 02-08-2024

Check for updates

**ABSTRACT**

Millet has been the staple food of Tamils since time immemorial. We can know this from the references to millets in Sangha literary hymns. We can also find details about millet in the literature like Iruvi millet, Iridi called millet, Nuvani millet, Iruvi millet, Iridi small millet, and Nuvani millet. There are references to millets in the ten-fold texts, which contain a collection of Sanga literary hymns. This article explains them. It also explains the health benefits of millet and the status of millet use today.

**Keywords:** Small millet - Sem millet - Iruvi - Sannipadam - Phlegm - Vatham - Asthma

## முன்னுரை

சங்க இலக்கியங்களில், நம் தமிழரின் தலையாய உணவாய் இருந்த தினை பற்றிய குறிப்புகள் விரவி கிடக்கின்றன. தினையில் பல்வேறு வகைகள் உள்ளன. தினை, சிறு தினை, செந்தினை, பசுந்தினை போன்ற தினை பற்றிய குறிப்புகளில் இருந்து அதை நாம் அறியலாம்.

குறிப்பாய் பத்துப்பாட்டு நூல்களில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, குறிஞ்சிப்பாட்டு, மலைபடுகடாம் போன்ற நூல்களில் இருக்கும் தினை பற்றிய குறிப்புகளை இக்கட்டுரை தருகிறது.

## திருமுருகாற்றுப்படை

முருகன் மேல் நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படை நூலில்,

‘குன்றுதொறு ஆடலும் நின்ற தன் பண்பே அதாஅன்று
சிறு தினை மலரொடு விரைஇ மறி அறுத்து
வாரண கொடியொடு வயின் பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர் கெழு விழவினும்’ 220
‘உருவ பல் பூ தூஉய் வெருவர
குருதி செம் தினை பரப்பி குறமகள்

முருகு இயம் நிறுத்து முரணினர் உட்க
முருகு ஆற்றுப்படுத்த உரு கெழு வியல் நகர்
ஆடுகளம் சிலம்ப பாடி பல உடன்’

என்ற பாடல் வரிகளில், சிறு தினை மற்றும் செம் தினை பற்றி பாடப்பட்டுள்ளது.

## பொருநராற்றுப்படை

கரிகால சோழன் பற்றி, முடத்தாமக் கண்ணியார் இயற்றிய **பொருநராற்றுப்படை** நூலில்,

‘ஆய் தினை அரிசி அவையல் அன்ன
வேய்வை போகிய விரல் உளர் நரம்பின்
கேள்வி போகிய நீள் விசி தொடையல்
மணம் கமழ் மாதரை மண்ணீ அன்ன
அணங்கு மெய் நின்ற அமைவரு காட்சி’
‘நீல் நிற முல்லை பல் திணை நுவல
கானக்கோழி கதிர் குத்த
மனை கோழி தினை கவர
வரை மந்தி கழி மூழ்க
கழி நாரை வரை இறுப்ப
தண் வைப்பின் நால் நாடு குழீஇ’

என்ற பாடல் வரிகளில், தினை அரிசி பற்றி பாடப்பட்டுள்ளது.

## பெரும்பாணாற்றுப்படை

தொண்டைமான் இளந்திரையன் பற்றி, கடியலூர் உருத்திரங் கண்ணனார் எழுதிய பெரும்பாணாற்றுப்படை நூலில்,

‘மடி வாய் கோவலர் குடி வயின் சேப்பின்
இரும் கிளை ஞெண்டின் சிறு பார்ப்பு அன்ன
பசும் தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்’ (168)

என்ற பாடல் வரிகளில், பசும் தினை பற்றி பாடப்பட்டுள்ளது.

## மதுரைக்காஞ்சி

பாண்டியன் நெடுஞ்செழியன் பற்றி மாங்குடி மருதனார் எழுதிய மதுரைக்காஞ்சி நூலில்

மீன் சீவும் பாண் சேரியொடு
மருதம் சான்ற தண் பணை சுற்றி
ஒருசார் சிறு தினை கொய்ய கவ்வை கறுப்ப
கரும் கால் வரகின் இரும் குரல் புலர

ஆழ்ந்த குழும்பில் திரு மணி கிளர

எழுந்த கடற்றில் நன் பொன் கொழிப்ப

பெரும் கவின் பெற்ற சிறு தலை நெளவி' 275

என்ற பாடல் வரிகளில், சிறு தினை பற்றி பாடப்பட்டுள்ளது.

## குறிஞ்சிப்பாட்டு

ஆரிய அரசன் பிரகதத்தன் பற்றி கபிலர் எழுதிய **குறிஞ்சிப்பாட்டு** நூலில்,*'முத்து ஆர் மருப்பின்* 'இறங்கு கை கடுப்ப

துய் தலை வாங்கிய புனிறு தீர் பெரும் குரல்

நல் கோள் சிறு தினை படு புள் ஓப்பி

எல் பட வருதியர் என நீ விடுத்தலின்

கலி கெழு மரம் மிசை சேணோன் இழைத்த" 40

என்ற பாடல் வரிகளில், சிறு தினை பற்றி பாடப்பட்டுள்ளது.

## இருவி என்ற தினைத்தாள்

மேலும், குறிஞ்சிப்பாட்டில் இருவி என்ற தினைத்தாள் குறிப்பிடப்பட்டுள்ளது. தினையின் அரிதாளால் வேய்ந்த குட்டையான கால்களையுடைய குடிசையிலிருக்கும், (மான்) பிணையைப் போன்ற பார்வையினையுடைய மனைவி எடுத்துக்கொடுப்ப, தேனால் சமைந்த கள் தெளிவை உண்டு, மகிழ்ச்சி மிக்கு இருக்கும் சூழலை வர்ணனை செய்யும் போது, புலவர்,

'இருவி வேய்ந்த குறும் கால் குரம்பை

பிணை ஏர் நோக்கின் மனையோள் மடுப்ப

தேம் பிழி தேறல் மாந்தி மகிழ் சிறந்து' 153-155

என்ற அடிகளில் இருவி என்ற சொல்லை குறிப்பிடுகிறார்.

## மலைபடுகடாம்

நன்னன் சேய் நன்னன் பற்றி பெருங்கௌசிகனார் எழுதிய மலைபடுகடாம் நூலில்

'கழை கண் உடைக்கும் கரும்பின் ஏத்தமும்

தினை குறு மகளிர் இசை படு வள்ளையும்

சேம்பும் மஞ்சளும் ஓம்பினர் காப்போர்

பன்றிப்பறையும் குன்றகம் சிலம்பும்

என்று இ அனைத்தும் இயைந்து ஒருங்கு ஈண்டி' 345

என்ற பாடல் வரிகளில், தினை பற்றி பாடப்பட்டுள்ளது.

## இருவி என்ற தினைத்தாள்

மேலும் மலைபடுகடாம் நூலிலும், இருவி என்ற தினைத்தாள் குறிப்பிடப்பட்டுள்ளது. புலவர், நெய் (உள்ளே) கொண்டிருக்க வளர்ந்தன பலவாகக் கிளைத்த ஈரப்பதமான எள், பொய்ச் சண்டைபோடும்

யானைக் கன்றுகளின் ஒன்றோடொன்று) பின்னிப் பிணைந்த துதிக்கைகள் போல, கொய்யப் படும் பக்குவம் பெற்றன பிணைந்துகிடக்கும் கதிர்களையுடைய தினை என்று ஒரு வயல் பகுதியை வர்ணனை செய்யும்போது,

“நெய் கொள ஒழுகின பல் கவர் ஈர் எள்

பொய் பொரு கயமுனி முயங்கு கை கடுப்ப

கொய் பதம் உற்றன குலவு குரல் ஏனல்

விளை தயிர் பிதிர்வின் வீ உக்கு இருவிதொறும்

குளிர் புரை கொடும் காய் கொண்டன அவரை” 105-110

என்ற பாடல் வாயிலாய், இருவி என்ற சொல்லைக் குறிப்பிடுகிறார்.

## இறடி

சங்க இலக்கிய உரையாசிரியர்கள், இறடி என்ற சிறு கூலம் தினை வகையைச் சேர்ந்தது என்று குறிப்பிடுகின்றனர். இதைக் கருந்தினை என்று கூறுவர். இந்தச் சொல்லும் பத்துப்பாட்டு நூலிலும் ஓரிடத்தில் குறிப்பிடப்படுகிறது.

‘கிழவிர் போல கேளாது கெழீஇ

சேண் புலம்பு அகல இனிய கூறி

பரூஉ குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு

குரூஉ கண் இறடி பொம்மல் பெறுகுவிர்’ 166-169

என்ற பாடல் அடிகளில், உரிமையுடையவர் போலக் கேட்காமலேயே (அவருடன்) நட்புரிமை கொள்ள, தொலைவிலிருந்து வந்த உம் வருத்தம் நீங்க இனிய மொழிகள் கூறி, பெரிய பெரிய தசைகள் மிகுதியாகப்போட்ட நெய்யின்கண் வெந்த பொரியலுடன், (மிகுந்த) நிறங்கொண்ட கண்போன்ற (பருக்கைகளாலான) தினைச்சோற்றுக் குவியலைப் பெறுவீர் என்று கூறும்போது இறடி என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்.

இவ்வாறு சங்க இலக்கியத்தில் இறடி என்ற தினை வகை குறிப்பிடப்பட்டுள்ளது.

## நுவணை எனும் தினைமா

தினையை உலர வைத்து மாவாக்கி சங்க கால மக்கள் உண்டு வந்துள்ளனர். இதனை அவர்கள் நுவணை என்று குறிப்பிடுவதாய் உரையாசிரியர்கள் கூறுகின்றன. எட்டுத்தொகை நூல்களிலும் பத்துப்பாட்டு நூல்களிலும், சில இடங்களில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. மலைபடுகடாம் நூலில்,

‘வெண் எறிந்து இயற்றிய மா கண் அமலை

தண்ணென் நுண் இழுது உள்ளீடு ஆக

அசையினிர் சேப்பின் அல்கலும் பெறுகுவிர்

விசையம் கொழித்த பூழி அன்ன

உண்ணுநர் தடுத்த நுண் இடி நுவணை’ 441-445

சர்க்கரையை (சுளகில்) கொழித்து (குருமணல் போன்ற பகுதியை நீக்கி ஒதுக்கிய) பொடியைப் போல, (திகட்டலால்) உண்பாரைத் தடுக்கும் நுண்ணிதாய் இடிக்கப்பட்ட தினைமாவையும் (பெறுவீர்)

என்று சங்ககால மக்களின் விருந்தோம்பல் பண்பை எடுத்துக் கூறும் போது, நுவணை பற்றி குறிப்பிடுகிறார்.

இப்பாடல்களின் மூலம், நுவணை என்பது, இடிக்கப்பட்ட தினை, தினைமா என்று அறிகிறோம். பத்துப்பாட்டில் தினை, சிறு தினை, செந்தினை, பசுந்தினை பற்றிய குறிப்புகள் அடங்கியுள்ளன.bஇவ்வாறு பத்துப்பாட்டில் பல புலவர்கள் குறிஞ்சி மற்றும் நெய்தல் நிலங்களில் வாழும் மக்கள் உண்ணும் தினை, சிறிதினை, செந்தினை பற்றி பாடல்களைத் தந்துள்ளார்கள்.

## பதார்த்தகுண சிந்தாமணி

மேலும், நம் தமிழ் மக்கள் நம்முடைய உணவின் மருத்துவ குணங்களையும் சிறப்பாக அறிந்திருந்ததை அவர்கள் பாடிய பல பாடல்களின் மூலம் அறியலாம்.

“சந்நிசுரம் ஐயந் தனிவாத மும்போகுந்

துன்னுபித் தத்தைமிகத் தூண்டிவிடுந் - தின்னப்

பினையும் பசியாம் பெருவீக்க நீங்குந்

தினையரிசி யின்குணத்தை தேர்” (838, பக். 245, பதார்த்தகுண சிந்தாமணி)

என்ற 1902 ஆம் ஆண்டு முதற் பதிப்பு செய்யப்பட்ட பதார்த்தகுண சிந்தாமணி என்ற நூலில் உள்ள பாடல், தினை அரிசி, சன்னிபாதம் , கபம் , வாதம் , சோகை நோய் இவற்றைப் போக்கி, பசியை உண்டாக்கும் என்று கூறுகிறது. தினை அரிசிக்கும் தனி குணங்கள் உள்ளன என்று நூறாண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர்கள் அறிந்திருந்தனர் என்பது இதிலிருந்து அறிகிறோம்.

## இன்றைய தினை பயன்பாட்டின் நிலை

பத்துப்பாட்டில் இருக்கும் இத்தகைய பாடல் வரிகள் அனைத்தையும் தொகுத்துக் கொடுப்பதற்கான நோக்கம், சங்க காலத்தில் தமிழர்களின் தலையாய உணவாய் தினை உணவு இருப்பதைக் காட்டுவதற்கே. சீனாவிலும் ஆப்பிரிக்காவிலும், இன்று வரையிலும் தினை அவர்களது உணவில் இடம் பெற்றுள்ளது என்பதை நம்மால் காண முடிகிறது. ஆனால், தென்னகத்தில் இடையில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்கள் காரணமாய், இந்தத் தினை உணவு தமிழர்களிடையே மறைந்து போனது என்றே கூற வேண்டும்.

தற்போது விவசாயிகள் கெண்டித்தினை, செந்தினை, மரத்தினை, பாலாந்தினை, வெள்ளைதினை, பைந்தினை, சிறுதினை, நாட்டுத்தினை, மாப்புத்தினை போன்ற தினை வகைகளை விளைவிக்கின்றனர். தமிழர்கள் தினையை மீண்டும் தங்களது தலையாய உணவாய் மாற்றி, உடல் நலமுடன் இருக்க வழி செய்து கொள்ள வேண்டும். இன்று நான் கடைகளில் தினை கூலத்தையும் அதனால் செய்யப்பட்ட பொருட்களையும் விற்பதைக் காண முடிகிறது. ஆனால் அவை கூடுதல் விலையில் இருப்பதால், அதை மக்கள் மத்தியில் கூடுதலாய் பயன்பாட்டிற்கு கொண்டுவர, கூடுதல் விளைச்சலையும், விலை குறைப்பையும் செய்வது சாலச்சிறந்தது.

## முடிவுரை

தமிழர் உணவான தினை நம்முடைய உணவிலே காலம் காலமாய் இருந்து வந்திருப்பதை நம்முடைய சங்கப்பாடல்களில் இருந்து அறியலாம். அதை இனியும் நாம் தொடர வேண்டும் என்று நோக்கில் தான் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. நாம் எப்போது பயன்படுத்தும் அரிசியைப் போலவே தினையையும் பயன்படுத்தலாம் என்பதைப் பலரும் மக்களுக்கு விழிப்புணர்வு தரும் வகையில் பல்வேறு நிகழ்வுகளை நடத்தி வருவதைக் காண்கின்றோம். தமிழர் உணவை உண்போம்! உடல்நலத்தைப் பெறுவோம்!

## References

பத்துப்பாட்டு நூல்கள்

பதார்த்தகுண சிந்தாமணி

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License